**கண்டி கடவத் சதர மற்றும் கங்கபட கோரளை பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி 16 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கண்டி கடவத் சதர மற்றும் கங்கபட கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம், 11காணித்துண்டுகளின் பொறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து, கணக்கீடு செய்திருக்கவில்லை

(ஆ) மீளாய்வாண்டின் போது ஏலவிற்பனவு மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 32,000 ஸ்கூட்டர், மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டி நிலையான சொத்துக்களின் கீழ் மேலும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மருந்து பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக 2013 பெப்ரவரி மாதம் கொள்வனவு செய்திருந்த ரூபா 76,490 இற்கான முற்பண தொகையில் குறிப்பிடப்பட்ட மருந்துப் பொருள் இருப்பு 2013 மார்ச் 23 திகதி சபைக்கு கிடைக்கப்பட்டு அவற்றில் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டிந்த போதும் அப் பெறுமதி களஞ்சிய முற்பணம் என கணக்குகளில் மேலும் காட்டப்பட்டிருந்தது

(ஈ) 2006 முதல் 2012 வரையான காலப்பகுதி தொடர்பாக சபையின் 06 அலுவலகர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 188,111 இற்கான நிலுவை சம்பளம் மற்றும் சம்பளஅதிகரிப்பு தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------ ------

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,650,621 ஆக காணப்பட்டதுடன், பட்டோலையின் பிரகாரம், அந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,941,383 ஆக காணப்பட்டமையால், ரூபா 290,762 இற்கான வித்தியாசம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டது

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 65,591,469 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 38,154,823 தொகையொன்று 01 முதல் 12 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் முன் கொண்டுவரப்படும் மீதிகளாக காணப்பட்டன. அத்துடன் அந்த மீதிகளை தேடி தீர்பபபதுக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலவு கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 62,683,036 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைதிருந்த கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,424,452 தொகை ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகை ரூபா 34,030,085 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

1.3.5 சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

----------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்<br>பிரிவு 132(ஏ) | சபையின் குறிக்கோள்களுடன் தொடர்பில்லாத கல்வி நெறி ஒன்றினை கற்பதற்காக உபதலைவர் மற்றும் மந்திரி ஒருவருக்கு ரூபா 87,814 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதி பிரமாணக் கோவை<br>நி.பி. 371(2) | முற்பணங்கள் பெறப்பட்டு, அதனொடு தொடர்புடைய கருமம் முடிவடைந்த உடனே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும், 01 வருடம் முதல் 07 வருடம் வரையான காலப்பகுதியில் 18 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 100,422 இற்கான முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 1982 இன் இலக்கம் 04 மற்றும் 1984 இன் இலக்கம் 44 சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டிருந்த 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டம் மற்றும் 2009 ஏப்ரல் 11 திகதிய இலக்கம் 1597/8 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 04 இடங்களில் அங்கீகாரமின்றிய வீட்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,156,167 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,272,187 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 28,883,980 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரி | 10,713 | 6,290 | 8,925 |
| (ii) | வாடகை | 313 | 57 | 158 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணம் | 4,707 | 2,874 | 131 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 11,672 | 38,485 | 42,653 |

2.2.2 வீதவரி

---------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 7,666,265 இற்கான வீதவரி நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 6,137,424 தொகையொன்று மேலும் அறவிடப்படாமல் காணப்பட்டது. இதன் பிரகாரம், ஆண்டின் போது நிலுவை வீதவரியில் அறவிடப்பட்டிருந்த தொகை நூற்றிற்கு 20 மாத்திரமே.

(ஆ) ரூபா 4,000 இனை மிகைத்த வீதவரி அறவிடப்படும் 234 வீதவரி அலகுகளினால் இனால் 03 முதல் 20 வரை வருட காலப்பகுதியில் ரூபா 1,974,353 இற்கான வீதவரி நிறுவையாகக் காணப்பட்டது.

(இ) போவல உப அலுவலகத்துடன் இணைந்த வலயத்தின் 14 அரச நிறுவனங்களில் இருந்து 05 வருட கால வீச்சைவிடக் கூடிய காலம் முதல் நிலுவை வீதவரி ரூபா 123,640 தொகையொன்று 2014 ஜூன் 30 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலப்பகுதியை விட கூடிய காலம் அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 157,527 இற்கான வாடகையினை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை ஒன்றினை கடைபிடித்திருக்கவில்லை.

2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் கழிவுப் பொருந்கள் வரி

--------------------------------------------------------------------------------------------

02 வருடங்களை விட கூடிய காலம் முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 130,710 இற்கான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் நிலுவையாகவுள்ள கழிவுப் பொருள்கள் வரி ரூபா 51,780 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நிலுவை மின் கட்டணம்

----------------------------------

10 வருடங்களை விட கூடிய காலம் முதல் முன் கொண்ட வரப்படும் ரூபா 2,734,948 இற்கான பெறவேண்டிய மின் கட்டண வருமானம் ஒன்றினை அறவீடு செய்வதற்கு அல்லது முறையான நடவடிக்கை ஏதும் கடைபிடிக்கப்பட்டு, தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 முத்திரை கட்டணம்

----------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 36,843,639 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. இந்த மீதி 2003 முதல் முன் கொண்டு வரப்பட்டிருந்ததுடன், அதனை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புகளை காட்டும் விகிதாசாரம் 1:0.81 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் விகிதாசாரம் 1:0.91 ஆக காணப்பட்டமையால் இந்த விகிதாசாரங்கள் உச்ச மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. ஒட்டமொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 50 ஆகிய ரூபா 54 மில்லியன் வருமான கடன்பட்டோர் ஆக காணப்பட்டதுடன், மொத்த நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 70 ஆகிய, ரூபா 62 மில்லியன் பலவின கடன்கொடுத்தோர் அடங்கியிருந்தன.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, வேலை இடை நிறுத்தப்பட்டுள்ள, ஓய்வு பெற்றுள்ள மற்றும் இறப்பு அடைந்துள்ள ஊழியர்கள் நாற்பது நபர்களிடம் 03 வருடங்கள் முதல் 10 வருடங்களை விட கூடிய கால வீச்சில் அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 847,686 இற்கான கடன் மீதியொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தேவையான விபரங்கள் சமர்பிக்கப்படாத 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன் கொண்டு வரப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,224,583 இற்கான 04 கடன்பட்டோர் மீதிகள் அறவீடு செய்வதற்கு அல்லது முறையான முறையான செயல்முறை ஒன்றினை கடைபிடித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 6,487,162 பெறுமதியான நீர் வேலைகள் பொருட்களின் இருப்பு 10 வருடத்தை மிகைத்த காலம் முதல் பயன்படுத்தப்படாமல் மற்றும் குறை பயன்பாடுகளுடன் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென்னேகும்புர தேக்கவத்தை பாதை

-----------------------------------------------------

ரூபா 500,000 செலவில் தென்னேகும்புர, தேக்கவத்தை பாதை இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பரப்பி 2013 நவம்பர் 30 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நிர்மாண வேலை தொடர்பான கொடுப்பனவு அறிக்கையின் வேலை விடயம் இலக்கம் 04 இன் கீழ் 1:2:4(3/4) கலவையில் கொங்கிரீட் பாதுகாப்பு சிறு மதில் 6'' அகலத்தில் மற்றும் 9'' உயரத்தில் கட்டப்படவேண்டும் எனினும், பாதையின் இறுதிப் பகுதியில் தென் பகுதி முதல் பாதுகாப்பு சிறு மதியின் உயரம் 6 ½'', 7'', 7 ½'' மற்றும் 9'' வும், பாதையின் ஆரம்பப் பகுதியில் தென்பகுதி வீட்டுக்கு அண்மையில் அதன் உயரம் 1 ½'', 2'', 2 ½'' மற்றும் 3 ½ ஆகிய அளவுகளில் மதிப்பீட்டு அளவினை விட குறைவாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) போவலவத்த செத்சிரி வர்த்தக நிலையத்திற்கு அருகில் முன் பகுதிக்கு செல்லும் பாதையை அபிவிருத்தி செய்தல்

------------------------------------------------------------------------------------------------------------------------

ரூபா 500,000 செலவில் போவலவத்த, செத்சிரி வர்த்தக நிலையத்திற்கு அருகில் முன் பகுதியில் செல்லும் பாதை இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பரப்பி 2013 திசெம்பர் 20 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இங்கு வேலை இலக்கம் 03 இன் பிரகாரம் பாதையின் இரு மருங்கிலும் போடப்பட்டிருந்த கொங்கிரீட் பாதுகாப்பு சிறு மதில்களின் உயரம் 10'' ற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அதன் உயரம் 7'', 8'' மற்றும் 9'' ஆகிய அளவுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(இ) ரதாகஸ்வத்த பாதைக்கு கொங்கிரீட் சீமெந்து கற்கள் பரப்புதல்

------------------------------------------------------------------------------------------

ரூபா 500,000 செலவில் ரதாகஸ்வத்த பாதைக்கு இணைத் தொடர்பாக கொங்கிரீட் கற்கள் பரப்பி 2013 திசெம்பர் 19 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பாதையில் கொங்கிரீட் பாதுகாப்பு சிறு மதில்கள் 9'' அளவுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அவை 4 ½'' மற்றும் 4'' அளவுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஈ) கெடவில மயானத்திற்கு அண்மையில் உள்ள கிராம மத்திய பாதையை அபிவிருத்தி செய்தல்

---

ரூபா 500,000 செலவில் கெடவில மயானத்திற்கு அண்மையில் உள்ள பாதை இணைத் தொடர்பு கொங்கிரீட் சீமெந்து கல் பரப்பி 2014 ஜனவரி 10 வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(i) மதிப்பீட்டில் விடய இலக்கம் 04 இன் கீழ் 1:2:4(3/4") சீமெந்து, மணல், கற்கல் கலவையில் பாதையின் இரு பகுதியிலும் பாதுகாப்பு சிறு மதில்களுக்காக 5.50 கன மீற்றர்களுக்காக ரூபா 85,140 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் 6.61 கனமீற்றர்களுக்காக ரூபா 102,322 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ii) வேலை விடய இலக்கம் 04 கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் பாதுகாப்பு சிறு மதிலின் அகலம் 6" வும மற்றும் உயரம் 9" வுற்கும் பதிலாக 6.61 கன மீற்றர்களுக்காக ரூபா 162,322 தொகையொன்று கொடுப்பனவு செய்திருந்த போதும் பாதுகாப்பு மதில்களில் உயரம் 4 ½ மற்றும் 5" ஆகிய அளவுகளால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(உ) மீ கனுவ விக்டோரியா பூங்கா பாதையை அபிவிருத்தி செய்தல்

---

ரூபா 433,545 செலவிட்டு, மீ கனுவ விக்டோரியா பூங்கா பாதையை இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பரப்பி 2014 மே 23 திகதி வேலை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(i) பாதைக்கு பதிக்கப்பட்டிருந்த சீமெந்து கற்கள் 30 அடி நீளத்திலும் மற்றும் 02 அடி அகலத்திலும் குழி ஏற்பட்டிருந்தது.

(ii) வேலை விடய இலக்கம் 04 இன் கீழ் 1:2"4(3/4") சீமெந்து, மணல், கற்கள் கலவையின் கொங்கிரீட் பாதுகாப்பு சிறு மதிலின் அகலம் 6" வும் உயரம் 9" வும் அளவினதாக 5.58 கனமீற்றர்களுக்காக ரூபா 86,378 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது, பாதையில் 15 அடி நீளத்தில் கொங்கிரீட் பாதுகாப்பு சிறு மதில்களில் உயரம் 1/2" ஆக காணப்பட்டது. அத்துடன், பாதையின் மீதி பகுதி 02 சந்தர்ப்பங்களில் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பாதுகாப்பு சிறு மதில்களின் உயரம் 7 ½ " மற்றும் 4 ½ " அளவுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொல்வத்த மேற்பகுதியை கொங்கிரீட் பண்ணுதல்

---

ரூபா 485,000 செலவிடப்பட்டு பொல்வத்தை மேற்பகுதி பாதையை கொங்கிரீட் பரப்பி 2013 அக்டோபர் 03 ஆந் திகதி வேலை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இந்த பாதையின் நீளம் 900 அடிகள் மற்றும் அகலம் 9 அடி கொண்ட இந்த பாதைக்கு 04 அங்குல கனத்தில் 1:2 ½ : 5 ( 1 அங்குல) சீமெந்து, மணல், கற்கள் கலவையில் கொங்கிரீட் பண்ணுவதற்காக 2.97 கியுப்களுக்காக ரூபா 100,671 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதும், பாதையின் கனம் 2 ½ ", 3" மற்றும் 4" ஆகிய அளவுகளில் மதிப்பீட்டு நியமங்களுக்கு இணக்கமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்ததென வெளிப்படுத்தப்பட்டது.

(எ) அம்பிடிய மத்தேகம பாதையை கொங்கிரீட் பண்ணுதல்

---------------------------------------------------------------------------------

ரூபா 500,000 செலவில் அம்பிடிய, மத்தேகம பாதையில் இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பரப்பி 2013 திசெம்பர் 29 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது இலகு வேலை விடய இலக்கம் 04 இன் கீழ் 1:2:4(மி.மி 19) சீமெந்து, மணல், கற்கள் கலவையில் அகலம் 6'' உயரம் 9'' அளவுகளில் நிர்மாணிப்பதற்காக 5.72 மீற்றர்களுக்காக ரூபா 88,245 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 04 சந்தர்ப்பங்களில் மேற் கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கொங்கிரீட் பாதுகாப்பு சிறு மதில்களில் 7'' மாத்திரமே காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை விடயங்களும் நல்லாட்சியும்

--------------------------------------------------------------------------

4.1 கொள்வனவுத் திட்டம்

---------------------------------

மீளாய்வாண்டின் போது ரூபா 61,838,904 இற்கான மூலதன செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக கொள்வனவு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 அகக் கணக்காய்வு

----------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு அக்டோபர் 31 திகதி அளவில் 28 செலவுத தலைப்புக்களின் ஏற்பாடுகள் போதாமையால், ஏனைய 25 செலவுத் தலைப்புக்களில் இருந்து ரூபா 2,898,000 இற்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தன.

(ஆ) முறையான ஆய்வுகள் மற்றும் திட்டமிடல் ஒன்று இன்றி மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளமையால் 06 செலவு தலைப்புக்களில் ஏற்பாடுகள் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 60 வரையான வீச்சில் சேமிக்கப்பட்டுள்ளது.

(இ) முறையான ஆய்வுகள் மற்றும் திட்டமிடல் ஒன்று இன்றி குறை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் 10 செலவு தலைப்புக்களில் நூற்றிற்கு 06 முதல் நூற்றிற்கு 100 வீச்சில் ஏற்பாடுகள் போதாமையால் வேறு செலவு தலைப்புக்களில் இருந்து மாற்றப்பட்டிருந்தன.

(ஈ) 20 செலவுத் தலைப்புக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,674,000 இற்கான ஏற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகளுடன் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது, 05

வருமான விடயங்களில் நூற்றிற்கு 39 முதல் நூற்றிற்கு 426 மற்றும் செலவு விடயங்களில் நூற்றிற்கு 23 முதல் நூற்றிற்கு 46 வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை

(ஊ) கழிவுப் பொருள் வருமான உபவிடயம் தொடர்பாக ரூபா 400,000 தொகையொன்று மதிப்பீடு செய்திருந்த போதும், அவற்றில் ஆதாயம் ஒன்றேனும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(எ) 04 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 36,672,410 இற்கான மதிப்பீட்டு வருமானத்தில் ரூபா 7,981,462 தொகையொன்று மாத்திரமே மீளாய்வாண்டின் போது உழைக்க முடிந்துள்ளது.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்